# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2046 தை-மார்கழி (2015 சனவரி-திசம்பர்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 12 | வெளியீடு: சூலை 2021



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 12
திருவள்ளுவர் ஆண்டு 2046 தை - மார்கழி (2015 சனவரி - திசம்பர்) | வெளியீடு: சூலை 2021

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தை அடிப்படையாகக் கொண்டு 12 புலங்களினூடாகக் (1.இலக்கியப் புலம், 2.மொழியியல் புலம், 3.மொழிபெயர்ப்புப் புலம், 4.அகராதியியல் புலம், 5.மொழிகள் - மொழிக்கல்விப் புலம், 6.வரலாறு, சமூகவியல், மாந்தவியல் புலம், 7.தொல்லியல் புலம், 8.சுவடியியல் புலம், 9.கல்வெட்டியல், நாணயவியல் புலம், 10.கலை, கட்டடவியல் புலம், 11.அயலகத் தமிழ்ப் புலம், 12.மொழித் தொழில்நுட்பப் புலம்) கீழ்க்காணும் முதன்மைத் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1. 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
2. பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்தல்
3. இணையவழியில் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
4. வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
5. வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
6. செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
7. பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
8. இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
9. செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்



அட்டைப் படம்
**நெய்தல் மலர்**

## பொருள் நிரல்

வாழ்த்துரை ........ 1
முதன்மை ஆசிரியர் உரை........ 2
கூட்டங்கள் ........ 3
கருத்தரங்குகள் ........ 5
சங்க கால வள்ளல்கள்
- டாக்டர் மு. வரதராசன் ........ 10
பயிலரங்குகள் ........ 14
ஆய்வு உதவித்தொகைகள் ........ 18
செம்மொழித் தமிழுக்கான
குடியரசுத் தலைவர் விருதுகள் ........ 19

**ஆசிரியர் குழு**

முதன்மை ஆசிரியர்
**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

ஆசிரியர்கள்
**முனைவர் அ. ஆரோக்கியதாசு**
**முனைவர் த. சரவணன்**
**முனைவர் சி. இராமச்சந்திரன்**
**முனைவர் இரா. வெங்கடேசன்**

தரவு உள்ளீடு
**திரு. அ. முருகேசன்**

தொழில்நுட்பம்
**திரு. த. செந்தில்குமார்**

வடிவமைப்பு
**திரு. க. சங்கர்**

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600 113.
தொலைபேசி: 044 – 22540125 | மின்னஞ்சல்: chemmozhi@cict.in | இணையம்: www.cict.in

**பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்**
துணைத்தலைவர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
தரமணி, சென்னை-113.



# வாழ்த்துரை

கல்லூரிப் பேராசிரியராக, கல்லூரி முதல்வராகப் பணியாற்றியதற்கும் மேலான மனநிறைவும், ஆய்வாளராகப் பல மேடைகளைக் கண்டுவந்தபோதும் கிடைக்கப்பெறாத புதிய சிந்தனையும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர்க் கிடைத்ததாக உணர்கிறேன்; தமிழர்களின் அயராத உழைப்பில் விளைந்த செம்மொழி நிறுவனத்தின் மூலமாகத் தமிழுக்குத் தொண்டாற்றக் கிடைத்த பெரும்பேறாக இவ்வாய்ப்பை எண்ணி மகிழ்கிறேன்.

1918ஆம் ஆண்டு நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டில் சென்னைப் பல்கலைக்கழகம் தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. 1919 மற்றும் 1920ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாக்களிலும், 1995ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலும் தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைப்போன்ற பல்வேறு அமைப்புகளின் தீர்மானங்களாலும், அறிஞர் பெருமக்களின் வேண்டுகோள்களாலும் செம்மொழித் தகுதிக்குரிய அறிவிப்புக்குப் பின்னர்ச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தோற்றம்பெற்றது. இவ்வகை வரலாற்றுச் சிறப்புமிக்க நிறுவனத்திற்குப் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் இயக்குநராக இருந்து செயலாற்றி வருகிறார். வேண்டிய ஆக்கப் பணிகளைச் செய்து செம்மொழி நிறுவனத்தை நன்னிலைக்கு உயர்த்துவார் என்ற நம்பிக்கையுடன், நிறுவனச் செயல்பாடுகளை உள்ளடக்கிய செய்திமடலைச் சிறப்பாக உருவாக்கியுள்ள ஆய்வாளர்களையும் தொழில்நுட்பப் பணியாளர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

(தெ. ஞானசுந்தரம்)
துணைத்தலைவர்



**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**
*இயக்குநர்*
*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்*
*தரமணி, சென்னை-113.*

# முதன்மை ஆசிரியர் உரை

ஒரு நூற்றாண்டிற்கு முன்னர், “தென்னாட்டின்கண் சிறந்தொளிர நின்ற நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றானாராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது திண்ணம். இத்துணை உயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த நம் அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோடு ஒருங்கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போல, தென்னாட்டுயர்தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம்” என்று தமிழை உயர்தனிச் செம்மொழியாகக் கருத வேண்டும் என்று முழங்கினார் பரிதிமாற் கலைஞர்.

பரிதிமாற் கலைஞரின் முழக்கம் இன்று நிறைவேறியிருக்கிறது. இத்தகு சூழலில் பண்டைய இலக்கியங்களைப் புதிய ஆய்வுச் சிந்தனைகள் கொண்டு பல்வேறு புதிய ஆய்வுகள் வெளிவருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

நாம் செய்துவரும் ஆய்வுப் பணிகளையும், அதனால் விளைந்த ஆக்கங்களையும் உரியவர்களுக்குச் சென்றுசேர்க்கும் வழிகளையும் நாம் கண்டறிந்து செயல்படுத்த வேண்டும்; புதுப்புது ஆய்வு நூல்களைப் படைத்தளிக்கும் சூழலையும் நாம் ஏற்படுத்த வேண்டும்.

நவீனத் தொழில்நுட்பத்தின் துணைகொண்டு செம்மொழி நிறுவனத்தின் வெளியீடுகளை அறிஞர்கள் பெற்றுக்கொள்ளும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுடன் அகழாய்வு, கல்வெட்டுகளில் கிடைக்கின்ற செவ்வியல் சான்றுகளை ஆவணப்படுத்த வேண்டும். இத்தகைய பணிகளுக்கெல்லாம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் துணையாக நின்று, வேண்டிய உதவிகளைச் செய்து அறிஞர்களை ஊக்குவித்து வருகின்றது.

ஒரு நிறுவனம் ஆற்றலுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதற்கு அடையாளமாகத் திகழ்வது அந்நிறுவனத்தின்வழி வெளிவருகின்ற செய்திமடலாகும். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செய்கின்ற பணிகள் அனைத்தையும் காலவாரியாக ஆவணப்படுத்தும் முயற்சியாகச் செய்திமடல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பன்னிரண்டாவது செய்திமடலாக இம்மடல் வெளிவருகின்றது. இந்த மடல் உருவாக்கத்தில் பங்காற்றிய அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**(இரா. சந்திரசேகரன்)**
இயக்குநர்

# கூட்டங்கள்

## -1-

## குறுந்திட்ட ஆய்வுக்கான விண்ணப்பங்களைத் தேர்வுசெய்யும் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் மேற்கொள்ளப்படும் குறுந்-திட்டங்களைத் தேர்வுசெய்வதற்கான கூட்டம் 21.01.2015, 22.01.2015 ஆகிய நாட்களில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் அருணை பாலறாவாயன்**
**பேராசிரியர் து. சீனிச்சாமி**
**பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்**
**பேராசிரியர் அன்னிதாமசு**



ஆகியோர் தேர்வுக்குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டனர். இக்குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட 16 ஆய்வுத் திட்டங்களில் கீழ்க்காணும் 15 ஆய்வுத் திட்டங்கள் முடிக்கப்பட்டு நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

1. முனைவர் மு. இராமகிருஷ்ணன் - **பண்டைத் தமிழ்ச் சமூக அறிவுத் தோற்றவியலின் பண்பாட்டு மாதிரிகள்: பழமொழி நானூற்றின் குறியியலும் அறிதலியலும்**
2. முனைவர் தி. சுப்பிரமணியன் - **தமிழகப் பாறை ஓவியங்கள் காட்டும் தமிழர் சமூகமும் வழிபாடும்**
3. திரு. ந. மனோகரன் - **தமிழ்ச் செவ்விலக்கியங்களின் மலையாள மொழிபெயர்ப்புகள் - வரலாறு - மொழிபெயர்ப்பு முறைமைகள்**
4. முனைவர் கே. தனலட்சுமி - **சங்க இலக்கியங்களில் நீராதாரங்களின் பயன்பாடும் பின்புலமும்**
5. முனைவர் தி. சுரேஷ் - **சங்க காலப் பண்கள்**
6. முனைவர் பா. பொன்னி - **சிலப்பதிகார, மணிமேகலைக் காப்பிய மாந்தரின் ஆளுமை**
7. முனைவர் ஜா. ராஜா - **சங்க இலக்கியத்தில் ஊனமுற்றோர்: மனிதவளப் பயன்பாடும் சமூகப் பங்களிப்பும்**
8. முனைவர் க. ஜெயபாலன் - **சங்கப் புறப்பாடல்களில் கருத்தாடல் நெறி**
9. முனைவர் சே. கல்பனா - **தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு வரலாறும் போக்குகளும்**
10. முனைவர் ந. அருள்மொழி - **ஆபிரகாம் மாஸ்லோவின் உளவியல் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியங்கள்**
11. முனைவர் ந. கலைவாணி - **திருக்குறள் இருமொழி அகராதி (தமிழ் - தமிழ்- ஆங்கிலம்)**
12. முனைவர் சி.ரவி - **பத்துப்பாட்டில் உள்ள குறிஞ்சிப் பாட்டில் கபிலர் குறிப்பிட்ட மலர்களின் மரபுசார் மருத்துவப் பயன்பாடுகள் - ஓர் ஆய்வு**
13. முனைவர் குடவாயில் மு. பாலசுப்ரமணியன் - **செம்மொழித் தமிழ் நூல்களில் தொன்மக் கூறுகளும் அவற்றின் கலை வடிவங்களும்**
14. முனைவர் அ.ச. அருள்சாமி - **தமிழ்ச் செவ்விலக்கியத்திற்குச் சுருக்கமான துணைநூலை உருவாக்குதல் (ஆங்கிலத்தில்)**
15. முனைவர் பி.கே. பாலசுப்பிரமணியன் - **பதினெண்கீழ்க்கணக்கு - இந்தி மொழிபெயர்ப்பு (திருக்குறள், நாலடியார் நீங்கலாக - 16 நூல்கள்)**

## -2-

## குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுத் திட்டங்களின் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 26.03.2015, 27.03.2015 ஆகிய இரண்டு நாள்களில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்**
**பேராசிரியர் சே. சுப்புலட்சுமி**
**பேராசிரியர் து. சீனிச்சாமி**
**பேராசிரியர் த. வசந்தாள்**

ஆகியோர் தேர்வுக்குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் மதிப்பிடப் பெற்ற திட்டப்பணி அறிக்கைகள் பின்வருமாறு:

1. முனைவர் பெ. சுயம்பு - **உ.வே.சா. நூலகச் செவ்வியல் சுவடிகள், அச்சு நூல்களின் ஆய்வடங்கல் (விளக்க நூற்றொகை)**
2. திரு. அ. சிவசுப்பிரமணியன் - **பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் மூத்தோர் வழிபாடும்**
3. முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி - **திருக்குறளும் தருமதீபிகையும் - ஓர் ஒப்பாய்வு**
4. முனைவர் ந. முருகேசன் - **தமிழகத்தில் பௌத்தத் தலங்களும் இடங்களும் நினைவுச் சின்னங்களும் (செவ்வியல் தமிழ் இலக்கியச் சான்றுகளின்படி)**
5. முனைவர் அ. பெனிட்டா - **செவ்வியல் தமிழ் இலக்கியமும் பழஞ்சீன இலக்கியமும் - ஓர் ஒப்பாய்வு**
6. முனைவர் ஜெயலலிதா - **தொல்காப்பியம் - கன்னட மொழிபெயர்ப்பு**
7. முனைவர் பா. செல்வ சண்முகம் - **உடம்பினை உறுதி செய்யத் திருமூலர் காட்டும் வழிகள்**
8. முனைவர் அ.கா.பெருமாள், திரு. செந்தீ நடராசன் - **சிலப்பதிகாரமும் கேரளக் கோவில்சார் கண்ணகி வழிபாடும்**
9. முனைவர் பி. சுபாஷ்சந்திரபோஸ் - **சங்க இலக்கியத்தில் கடல் வாணிகமும் பண்பாட்டுப் பரிமாற்றங்களும்**
10. முனைவர் க. நெடுஞ்செழியன் - **சங்க இலக்கிய அகத்திணை மரபுகளும் இந்தியக் காதல் இலக்கியங்களும்**
11. திரு.மு. பாலசுப்பிரமணியன், திரு.நா. மம்மது - **தமிழ்த் திணையியல் களஞ்சியம்**
12. முனைவர் ஜி. முத்துலட்சுமி - **கோவை மாவட்டப் பழங்குடி மக்கள் வாழ்வியலில் சங்க மரபுகள்**
13. முனைவர் ஜெ. இராஜா முகமது - **பண்டைய புதுக்கோட்டையின் வரலாறும் பண்பாடும் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை)**
14. முனைவர் ப. கொழந்தசாமி - **தொல்காப்பிய எழுத்ததிகாரப் பொருண்மையியல் செய்திகள்**
15. முனைவர் தி. முருகரத்தனம் - **அனைத்திந்திய வரலாற்று அறிவுநெறிச் சூழ்புலத்தில் வள்ளுவரது முப்பாலின் இடம்**
16. முனைவர் கோ. சாந்தி, முனைவர் எஸ். குருஞானாம்பிகா - **திருக்குறளும் கிருந்தாவளியும்**
17. முனைவர் அ. இலட்சுமி தத்தை - **இலக்கணக் கோட்பாடும் சங்க இலக்கியக் கூற்றுகளும் பெண்சமூக உருவாக்கமும்**
18. முனைவர் த. கவிதா - **பாலக்காடு வட்டாரப் பழங்குடியினர் மொழிகளில் பழந்தமிழ் வழக்காறுகள்**
19. முனைவர் கோ. வீரமணி - **தொல்காப்பியம் கூறும் இலக்கியக் கோட்பாடுகள்**
20. முனைவர் கலை. செழியன் - **சங்க இலக்கியத்தில் காணப்படும் சட்டவியல் நெறிமுறைகள்**
21. முனைவர் பா. சாந்தி - **சங்க இலக்கியம் காட்டும் பரத்தையர் வாழ்வும் இரட்டைக் காப்பியங்கள் காட்டும் பரத்தையர் வாழ்வும் - ஓர் ஒப்பீடு**
22. திரு. வி. ப. யதீஸ்குமார் - **சங்க அகழாய்வுக் களங்கள் - சேரநாடு குறித்த கள ஆய்வு**
23. முனைவர் த. கருப்பையா - **பண்பாட்டு மானிடவியல் நோக்கில் பதினெண் கீழ்க்கணக்குப் பனுவல்கள்**

-3-

## முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் முனைவர் பட்ட மேலாய்வு மேற்கொள்பவர்களின் ஆய்வுகளை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் 22.06.2015 அன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில்,

**பேராசிரியர் பெ. மாதையன்**
**முனைவர் பெ. செல்வக்குமார்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் ச. மனோகரன்**
**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**

ஆகியோர் வல்லுநர்களாகக் கலந்துகொண்டனர்.



# கருத்தரங்குகள்

செம்மொழித் தமிழாய்வுகளை மேம்படுத்தவும் பரவலாக்கவும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் உள்ள கல்வி நிறுவனங்களுக்குக் கருத்தரங்குகள் நடத்த ஆண்டுதோறும் நிதிநல்கி வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கான தமிழியல் மாணவர்களும் ஆய்வாளர்களும் பயன்பெற்றுள்ளனர். அவ்வகையில், 2015ஆம் ஆண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையில் பின்வரும் 80 கருத்தரங்குகள் நடைபெற்றன.

1. **செவ்வியல் இலக்கியம் காட்டும் பயணங்களும் பதிவுகளும்** - *முனைவர் ஜி. ஜகதீஸ்வரி, தமிழ்த்துறை, கே.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் (02.01.2015 முதல் 04.01.2015 வரை).*

2. **தொல்காப்பியக் கவிதையியலும் சங்கக் கவிதை மரபும்** - *முனைவர் இரா. இளவரசு, தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி (03.01.2015 முதல் 05.01.2015 வரை).*

3. **செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் அமைதியாக்கக் கொள்கைகளும் செயல்பாடுகளும்** - *திருமதி க. வளர்மதி, தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி(06.01.2015 முதல் 08.01.2015 வரை).*

4. **எட்டுத்தொகை நூல்களில் இயற்கை வளம்** - *முனைவர் அ. அருள்சீலி, தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர் (07.01.2015 முதல் 09.01.2015 வரை).*

5. **சங்க இலக்கியத் தொன்மங்களில் பெண்கள்** - *முனைவர் கே. வெங்கடேசன், தமிழ்த்துறை, காஞ்சி ஸ்ரீ கிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, காஞ்சிபுரம் (07.01.2015 முதல் 09.01.2015 வரை).*

6. **சங்க இலக்கியத்தில் தொழில்கள்** - *முனைவர் இரா. அருணா ஜோதி, தமிழ்த்துறை, வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி, காயல்பட்டணம் (07.01.2015 முதல் 09.01.2015 வரை).*

7. **செவ்வியல் இலக்கியங்களில் புலப்படும் அழகியல் பரிமாணங்கள்** - *முனைவர் ப. கமலக்கண்ணன், தமிழ்த்துறை, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (08.01.2015 முதல் 10.01.2015 வரை).*




8. **மின் ஊடகங்களில் சங்க இலக்கியச் சொல்லடைவுகளும், அகராதி தொகுத்தலும்** - *முனைவர் துரை. மணிகண்டன், தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி (08.01.2015 முதல் 10.01.2015 வரை).*




9. **இரட்டைக் காப்பியங்களில் மானுட மதிப்பீடுகள்** - *பேரா. தா. நீலகண்டப் பிள்ளை, தமிழ்த்துறை, தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் (08.01.2015 முதல் 10.01.2015 வரை).*

10. **சிலப்பதிகார ஆங்கில மொழிபெயப்புகள்: திறனாய்ந்து மதிப்பிடுதல்** - *திரு. பி. அரங்கசாமி, பெரியார் கருத்து மையம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (08.01.2015 முதல் 10.01.2015 வரை).*

11. **செவ்வியல் இலக்கியத்தில் அறம்** - *முனைவர் வே.அ. பழனியப்பன், தமிழ் உயராய்வு மையம், கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி (08.01.2015 முதல் 10.01.2015 வரை).*

12. **தொல்காப்பிய இலக்கிய மரபு நோக்கில் கீழ்க்கணக்கு நூல்கள் (அக, புறக் கோட்பாடுகள் ஓர் ஒப்பீட்டு நோக்கு)** - *முனைவர் த. இளஞ்செழியன், தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி, தஞ்சாவூர் (20.01.2015 முதல் 22.01.2015 வரை).*

13. **தொல்காப்பியச் சொற்பொருண்மைக் கொள்கை - கலைச் சொல்லாக்கக் கோட்பாடுகள்** - *முனைவர் நா. ஜானகிராமன், தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, பெரம்பலூர் (21.01.2015 முதல் 23.01.2015 வரை).*

14. **சங்க இலக்கியத் தொகை நூல்களும் உரையாசிரியர்களின் உரைத்திறன் அமைவும்** - *முனைவர் அ. செல்லப்பா, தமிழ்த்துறை,*

ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி *(21.01.2015 முதல் 23.01.2015 வரை).*

15. **சங்க இலக்கியங்களில் அகம், புறம் சார்ந்த அற உணர்வுகள்** - முனைவர் பா. நாகஜோதி, தமிழ்த்துறை, வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர் *(21.01.2015 முதல் 23.01.2015 வரை).*

16. **சங்க இலக்கியங்களில் பெண் மொழியும் இருப்பும்** - முனைவர் நா. தனராசன், தமிழ்த்துறை, திரு.வி.க. அரசுக் கலைக் கல்லூரி, திருவாரூர் *(21.01.2015 முதல் 23.01.2015 வரை).*




17. **சங்க இலக்கியமும் அணுகுமுறைகளும்** - முனைவர் எஸ். ஜெயகுமாரி, தமிழ்த்துறை, விவேகானந்தா கல்லூரி, கன்னியாகுமரி *(22.01.2015 முதல் 24.01.2015 வரை).*

18. **தொல்காப்பியம் கற்றல் கற்பித்தல் முறைகள்** - முனைவர் பி. கந்தசாமி, தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, நாமக்கல்*(22.01.2015 முதல் 24.01.2015 வரை).*

19. **செவ்வியல் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுப் புலவர்கள்** - முனைவர் தி. மல்லிகா, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை *(22.01.2015 முதல் 24.01.2015 வரை).*

20. **சங்க இலக்கியம் காட்டும் பக்தி** - முனைவர் மு. அம்சவேணி, தமிழ்த்துறை, இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி, தெள்ளாறு *(22.01.2015 முதல் 24.01.2015 வரை).*

21. **சங்க இலக்கியங்களில் தொழில்சார் பண்பாடு** - முனைவர் ந. கந்தம்மாள், தமிழ்த்துறை, ஏ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி, தூத்துக்குடி *(28.01.2015 முதல் 30.01.2015 வரை).*

22. **காலந்தோறும் தமிழ்நாட்டுச் சமூகப் பண்பாடு, அரசியல் வாழ்வு மீதான தமிழ்ச் செவ்விலக்கியத்தின் கருத்தியல் மேலாதிக்கம்** - முனைவர் சி. தாமஸ், வரலாற்றுத்துறை, பெரியார் ஈ.வெ.ரா. தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி *(28.01.2015 முதல் 30.01.2015 வரை).*

23. **செம்மொழி இலக்கியங்களில் மகளிர்** - முனைவர் கே. தேவி பூமா, தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை *(28.01.2015 முதல் 30.01.2015 வரை).*

24. **சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சோஃபோக்ளீஸ் தீபன் துன்பியல்களும் - ஓர் ஒப்பாய்வு** - திருமிகு மேரி பிரிஜித், ஆங்கிலத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, பெரம்பலூர் *(28.01.2015 முதல் 30.01.2015 வரை).*

25. **சங்க இலக்கியத்தில் இயற்கைச் சூழல்கள்** - திருமதி சி. பேபி ஷகிலா, தமிழ்த்துறை, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, திருவனந்தபுரம் *(28.01.2015 முதல் 30.01.2015 வரை).*

26. **தற்கால, நவீன, தாராளமய, உலகமயச் சமூகத்தில் பழந்தமிழ் இலக்கியத்தின் பொருத்தப்பாடு** - முனைவர் அ. விஜயரங்கன், சமூகவியல் துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,மதுரை *(28.01.2015 முதல் 30.01.2015 வரை).*

27. **சங்க இலக்கிய மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்** - முனைவர் எஸ். அகிலாண்டேசுவரி, தமிழ்த்துறை, சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி, திருச்சி.. *(29.01.2015 முதல் 31.01.2015 வரை).*

28. **செவ்வியல் இலக்கண இலக்கியங்களில் முத்தமிழ்க் கோட்பாடுகள்** - பேரா. செ. சாந்தி, தமிழ்த்துறை, வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (த), விருதுநகர் *(29.01.2015 முதல் 31.01.2015 வரை).*

29. **சங்க இலக்கியம் - ஓர் அறிமுகம்** - தி. திலிப்குமார், தமிழ்த்துறை, இந்துஸ்தான் கலை, அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் *(29.01.2015 முதல் 31.01.2015 வரை).*

30. **இந்திய மொழிகளிலும் அயல்நாட்டு மொழிகளிலும் உள்ள திருக்குறள் மொழிபெயர்ப்புகள்** - முனைவர் இரா. தாமோதரன், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி *(29.01.2015 முதல் 31.01.2015 வரை).*

31. **குறுந்தொகை மீது தற்கால மேலை இலக்கியக் கோட்பாடுகளைப் பொருத்திப்பார்த்தல்** - முனைவர் எஸ். பப்புபெஞ்சமின் இளங்கோ, ஆங்கிலத்துறை, புனித வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி *(02.02.2015 முதல் 04.02.2015 வரை).*

32. **முத்தொள்ளாயிரத்தில் சங்க இலக்கிய மரபுகள்** - முனைவர் மு. மணிமாது, தமிழ்த்துறை, அறிஞர்

அண்ணா கலை அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி (02.02.2015 முதல் 04.02.2015 வரை).

33. **பிற்காலப் பனுவல்களில் சிலப்பதிகாரத்தின் தாக்கம்** - முனைவர் கே. காசி மாரியப்பன், தமிழ்த்துறை, பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி, திருச்சி (03.02.2015 முதல் 05.02.2015 வரை).

34. **செவ்வியல் பனுவல்களில் பாலைநில வாழ்வியல்** - முனைவர் ஜி. குணசேகர், தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி, பெரம்பலூர் (04.02.2015 முதல் 06.02.2015 வரை).

35. **திருக்குறள் அமைப்பும் உரையாசிரியர்கள் நோக்கும்** - முனைவர் எஸ். பெரியநாயகி, தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் (04.02.2015 முதல் 06.02.2015 வரை).

36. **இரட்டைக்காப்பியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள்** - முனைவர் பி.எஸ். செல்வராணி, தமிழ்த்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி, பெரம்பலூர் (04.02.2015 முதல் 06.02.2015 வரை).

37. **செவ்வியல் இலக்கியங்களில் பெண்ணின் இருப்பு** - முனைவர் எஸ். ஆரோக்கியம், தமிழ்த்துறை, இரத்தினம் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் (04.02.2015 முதல் 06.02.2015 வரை).

38. **சங்க இலக்கியத்தில் தமிழர் பழக்க வழக்கங்கள் - அன்றும் இன்றும்** - திரு. க. அழகர், தமிழ்த்துறை, இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி, இராஜபாளையம் (04.02.2015 முதல் 06.02.2015 வரை).




39. **உளவியல் - மானிடவியல் - மொழியியல் நோக்கில் சங்க அகப்பாடல்களின் கருத்துப் புலப்பாட்டு நெறி** - சி. கலைமுகிலன், தமிழ்த்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி (04.02.2015 முதல் 06.02.2015 வரை).

40. **சங்க இலக்கியங்களில் கட்டடக்கலையும் அகழ்வாய்வில் கிடைத்த சின்னங்களும் ஒப்பு நோக்குதல்** - முனைவர் தி. சத்தியமூர்த்தி, பண்டை இந்தியாவின் தொல்லியல் மற்றும் அறிவியல் ஆய்வகம், சென்னை (04.02.2015 முதல் 06.02.2015 வரை).

41. **பண்டைய கல்வி முறை - பன்முகநோக்கு** - திரு. சி. பழனியாண்டி, தமிழ்த்துறை, ஸ்ரீ லட்சுமி கல்வியியல் கல்லூரி, ஜெயங்கொண்டம் (05.02.2015 முதல் 07.02.2015 வரை).

42. **நீதி இலக்கியங்களில் வாழ்வியல்** - முனைவர் இரா. சிவக்குமாரன், தமிழ்த்துறை, மன்னை இராஜகோபாலசுவாமி அரசினர் கலைக் கல்லூரி, மன்னார்குடி (05.02.2015 முதல் 07.02.2015 வரை).

43. **பழந்தமிழ்க் கல்வெட்டு மற்றும் இலக்கியங்களில் அறிவியல் தொழில்நுட்பம்** - முனைவர் எஸ். சுவாமிநாதர், வரலாற்றுத்துறை, திருவள்ளுவர் கலைக் கல்லூரி, இராசிபுரம் (05.02.2015 முதல் 07.02.2015 வரை).

44. **சங்க இலக்கியங்களில் நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் மற்றும் நிகழ்த்து முறைகள்** - முனைவர் மு. சுப்பையா, நிகழ்த்துக்கலைத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி (09.02.2015 முதல் 11.02.2015 வரை).

45. **சங்க காலப் பெண் கவிஞர்களின் படைப்புகள்** - பேரா. எஸ். நாகூர்கனி, தமிழ்த்துறை, ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி (09.02.2015 முதல் 11.02.2015 வரை).

46. **எட்டுத்தொகை இலக்கியங்களும் பண்டைத் தமிழர் தத்துவச் சிந்தனை மரபும்** - முனைவர் சூ.ஜா. இதயராஜா, தமிழ்த்துறை, தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை (11.02.2015 முதல் 13.02.2015 வரை).

47. **சங்க இலக்கியம் உணர்த்தும் சூழலியல் சிந்தனைகள்** - எஸ். ஐ. ஜெயந்தி, தமிழ்த்துறை, தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை (11.02.2015 முதல் 13.02.2015 வரை).

48. **செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் சமயக் கூறுகளும் பிற்கால இலக்கிய வகைகளும்** - முனைவர் வேல். கார்த்திகேயன், தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, புதுச்சேரி (11.02.2015 முதல் 13.02.2015 வரை).

49. **ஆற்றுப்படை இலக்கியங்கள் காட்டும் நானில வாழ்வியல் நெறிகள்** - முனைவர் ந. இராஜேந்திரன், தமிழ்த்துறை, மகாராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெருந்துறை (12.02.2015 முதல் 14.02.2015 வரை).

50. **பழந்தமிழகத்தில் கற்றல் கற்பித்தல்** - முனைவர் சி. மாணிக்கவாசகம், நூலக அறிவியல் துறை,




தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் (12.02.2015 முதல் 14.02.2015 வரை).

51. **பழந்தமிழகத்தில் பெண் கலைஞர்கள்** - முனைவர் என். சந்திரா, தமிழ்த்துறை, பி.கே.ஆர். மகளிர் கலைக் கல்லூரி கோபிசெட்டிப்பாளையம் (17.02.2015 முதல் 19.02.2015 வரை).

52. **தொல்காப்பிய மரபும் சங்க இலக்கியமும்** - முனைவர் ந. சிவசுப்பிரமணி, தமிழ்த்துறை, மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி, நாமக்கல் (18.02.2015 முதல் 20.02.2015 வரை).




53. **செம்மொழி இலக்கியங்கள் புலப்படுத்தும் நாட்டுப்புறக் கலைகளும் நிகழ்த்தும் முறைகளும்** - முனைவர் அ. பிறைமதி, தமிழ்த்துறை, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி (த), திருச்சிராப்பள்ளி (18.02.2015 முதல் 20.02.2015 வரை).

54. **தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களின் மீட்டுருவாக்கப் படைப்புகள்** - முனைவர் செல்வகுமரன், தமிழ்த்துறை, புனித வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (18.02.2015 முதல் 20.02.2015 வரை).

55. **இறையனார் அகப்பொருள்: பதிப்புகள், ஆய்வுகள் - ஒப்பீடு** - முனைவர் கே. என். நித்தியா, தமிழ்த்துறை, காவேரி மகளிர் கல்லூரி, திருச்சி (18.02.2015 முதல் 20.02.2015 வரை).

56. **செவ்வியல் இலக்கியத்தில் நீர்வளங்கள்** - பேரா. இரா. ஜீவா, தமிழ்த்துறை, வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (த), விருதுநகர் (19.02.2015 முதல் 21.02.2015 வரை).

57. **செவ்வியல் நூல்களில் கூற்று மரபும் மாற்றமும்** - முனைவர் எம். ஜோதிலெட்சுமி, தமிழ்த்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி (23.02.2015 முதல் 25.02.2015 வரை).

58. **சங்க இலக்கியத்தில் சுற்றுச் சூழலியலும் பல்லுயிர்ப் பாதுகாப்பும்** - முனைவர் ஆரோக்கிய ஜெயசீலி, தமிழ்த்துறை, ஆக்சீலியம் கல்லூரி, வேலூர் (23.02.2015 முதல் 25.02.2015 வரை).

59. **பழங்காலத்தில் வாணிகமும் வணிகரும்** - முனைவர் அ. வெங்கடேசுவரன், வணிகவியல் துறை, திருநெல்வேலி தெட்சிணமாற நாடார் சங்கக் கல்லூரி, திருநெல்வேலி (23.02.2015 முதல் 25.02.2015 வரை).

60. **பண்பாட்டியலுக்கும் மொழியியலுக்கும் கால்டுவெல்லின் பங்களிப்பு** - முனைவர் அ. யசோதா, தமிழ்த்துறை, காவேரி மகளிர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (23.02.2015 முதல் 25.02.2015 வரை).

61. **செவ்வியல் தமிழ் இலக்கிய இலக்கண மொழிபெயர்ப்புகள்** - முனைவர் பி. பத்மினி, தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை (25.02.2015 முதல் 27.02.2015 வரை).



62. **தொல்காப்பிய உரைவழித் தமிழர் சிந்தனை மரபு** - முனைவர் சே. தெய்வக்கன்னி, தமிழ்த்துறை, இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம் (25.02.2015 முதல் 27.02.2015 வரை).

63. **கோட்பாட்டியல் நோக்கில் தொல்காப்பியம்** - முனைவர் பி. முருகன், தமிழ்த்துறை, அரசுக் கலைக் கல்லூரி, பாலக்காடு, கேரள மாநிலம் (26.02.2015 முதல் 28.02.2015 வரை).

64. **சங்க இலக்கியத்தில் நுண் கலைகள்** - முனைவர் பி.எ. பழனிசாமி, தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி (26.02.2015 முதல் 28.02.2015 வரை).

65. **சிவப்பிரகாசர் இலக்கியங்களில் சங்க இலக்கியச் செல்வாக்கு** - முனைவர் எஸ். விஜயகாந்தி, ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் மற்றும் கலை



அறிவியல் கல்லூரி, மயிலம். (27.02.2015 முதல் 01.02.2015 வரை)

66. **சங்க இலக்கியத்தில் அறக் கூறுகள்** - முனைவர் பி. கே. பாலசுப்பிரமணியன், தக்ஷிண பாரத இந்தி பிரச்சார சபை, சென்னை. (01.03.2015 முதல் 03.03.2015 வரை)

67. **தமிழும் கணிதமும்** - திருமதி வி. சுசீலா, கணிதத்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை. (04.03.2015 முதல் 06.03.2015 வரை)

68. **சங்கச் செவ்வியல்கள் மற்றும் தொல்லியல் மூலம் தமிழர்களின் சமூக வரலாற்றை மீள்வாசித்தல், மீள்விளக்கமளித்தல், மீட்டுருவாக்குதல்** - முனைவர் அ. மகாலிங்கம், வரலாற்றுத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. (04.03.2015 முதல் 06.03.2015 வரை)

69. **தொல்காப்பியம் சொல்லதிகார உரைகள்** - முனைவர் க. துரையரசன், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, கும்பகோணம். (04.03.2015 முதல் 06.03.2015 வரை)






70. **செவ்வியல் இலக்கியங்களில் மகளிரும் மரபுசார் வாழ்க்கையும்** - முனைவர் த. மலர்க்கொடி, தமிழ்த்துறை, தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் (04.03.2015 முதல் 06.03.2015 வரை).

71. **தமிழ், மலையாள மொழிகளின் செவ்வியல் கூறுகள்** - முனைவர் பி. ஜெயகிருஷ்ணன், தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் (04.03.2015 முதல் 06.03.2015 வரை).

72. **நடுநாடு சார்ந்த சங்கப் புலவர்களின் படைப்புகளும் பாடப்பட்ட மன்னர்களும் அம்மரபில் பின்வந்த படைப்பாளிகளும்** - முனைவர் இரா. தமிழரசி, தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்புரம் (09.03.2015 முதல் 11.03.2015 வரை).

73. **Dravidian Languages (Tamil) on Malto of Mal Paharia Community of Santhal Pargana, Jharkhand** - முனைவர் இராமச்சந்திர ராய், சாந்திநிகேதன் இந்தி பிரச்சார சபை, சாந்திநிகேதன் (09.03.2015 முதல் 11.03.2015 வரை).

74. **தமிழ்ச்செவ்வியல் அற இலக்கியமும் கேரளக் கலை இலக்கியப் பண்பாட்டுக் கூறுகளும்** - திரு. ஜி. கதிரவன், தமிழ்த்துறை, அரசுக் கலைக் கல்லூரி, சித்தூர், பாலக்காடு, கேரள மாநிலம் (11.03.2015 முதல் 13.03.2015 வரை).

75. **கலித்தொகை: பதிப்பு, உரை இயல்புகள்** - முனைவர் மு. முனீஸ்மூர்த்தி, தமிழ்த்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி (12.03.2015 முதல் 14.03.2015 வரை).

76. **சங்க இலக்கியத்தில் மலர்களின் பயன்பாட்டுப் பின்புலம்** - முனைவர் என். ஜித்தேந்திரன், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி (12.03.2015 முதல் 14.03.2015 வரை).

77. **சங்கச் சமூகத்தில் பெண்டிர் நிலை** - முனைவர் கோ. சங்கரவீரபத்திரன், தமிழ்த்துறை, ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி (17.03.2015 முதல் 19.03.2015 வரை).

78. **எட்டுத்தொகையில் இதிகாச, புராணக் கதைக்கூறன்கள் (Motif)** - முனைவர் கே. கேசவராஜராஜன், தமிழ்த்துறை, காந்திகிராம பல்கலைக்கழகம், காந்திகிராமம் (19.03.2015 முதல் 21.03.2015 வரை).

79. **செம்மொழித் தமிழின் தொடர்மொழி அமைப்பு** -பேரா. ரா. செயராமன், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் (23.03.2015 முதல் 25.03.2015 வரை

80. **சங்க இலக்கிய உரை வளம்** - முனைவர் வி. செல்வராஜ், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி (26.03.2015 முதல் 28.03.2015 வரை

# சங்க கால வள்ளல்கள்

டாக்டர் மு. வரதராசன்

பொருள் சேர்த்தவர் பொருள் இல்லாதவர்க்குக் கொடுத்து உதவ வேண்டும். அதனால் புகழ் பெற வேண்டும். அது தவிர உயிர் வாழ்க்கைக்கு நன்மை வேறொன்றும் இல்லை. இதுவே பழங்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் கொள்கையாக இருந்தது.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு** *(232)*

என்று திருவள்ளுவர் அதனை எடுத்துச் சொல்கிறார். சங்க கால இலக்கியம் எனப்படும் புறநானூறு முதலாய பழந்தமிழ் நூல்களில் பலர் இந்தக் கொள்கையைப் போற்றி வாழ்ந்துள்ளனர் என்பதை அறியலாம்.

பழந்தமிழ் நாட்டை ஆண்டு வந்த சேர சோழ பாண்டிய வேந்தர்களில் சிலர் புலவர்க்கும் பிறர்க்கும் பொருள் கொடுத்து உதவிப் புகழ் பெற்றனர். சிற்றரசர்களில் சிலர் அவ்வாறு கொடைப் பண்பு உடையவர்களாய்ப் புகழுடன் வாழ்ந்துள்ளனர். வேந்தரும் குறுநில மன்னரும் அல்லாத செல்வர் சிலரும் அவ்வாறு புகழ்பட வாழ்க்கை நடத்தியுள்ளனர். அவர்களுள், பாரி முதலான எழுவர் மட்டும் தனிச்சிறப்புக்கு உரியவர்களாய் வள்ளல்கள் எனப் போற்றப்பட்டுள்ளனர். அதற்குக் காரணம், பத்துப்பாட்டுள் ஒன்றாகிய சிறுபாணாற்றுப்படை என்னும் பாட்டில் அந்த எழுவர் புகழையும் ஒருசேர எடுத்துரைத்துப் பாடியிருப்பதே எனலாம்.



**எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்**
*(சிறுபாணாற்றுப்படை. 113)*

என நத்தத்தனார் என்ற புலவர் அந்தப் பழங்காலத்திலேயே அந்த எழுவரையும் ஈகை மேற்கொண்ட வள்ளல்கள் என்று புகழ்ந்த மொழியால், அவர்கள் ஏழு வள்ளல்கள் எனப் போற்றப்பட்டனர். கடைச்சங்க காலத்துப் பாடல்களில் நின்ற புகழ் உடையவராதலின், அவர்கள் கடையெழு வள்ளல்கள் என்று சுட்டப்பட்டனர் போலும். பெருஞ்சித்திரனார் என்ற புலவர் தம் பாட்டு ஒன்றில் எழுவரையும் ஒருங்கே பாடியுள்ளார்.

**பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்**
**கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்**
**காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த**
**மாரி ஈகை மறப்போர் மலையனும்**
**ஊரா தேந்திய குதிரைக் கூர்வேல்**
**கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியும்**
**ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை**
**அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப்**
**பெருங்கல் நாடன் பேகனும் திருந்துமொழி**
**மோசி பாடிய ஆயும் ஆர்வமுற்று**
**உள்ளி வருநர் உலைவு நனிதீரத்**
**தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்**
**கொள்ளார் ஓட்டிய நள்ளியும் எனவாங்கு**
**எழுவர் மாய்ந்த பின்றை**

*(புறநானூறு. 158)*

கபிலர், பரணர் முதலாய புலவர்கள் எழுவரையும் ஒருங்கே பாடாவிடினும் இவர்களுள் பலரைப் பாடியுள்ளனர். இந்த எழுவர் அல்லாமல் வேறு சிலர் கொடை வள்ளல்களாய்ப் புகழ் பெற்றுள்ளனர். குமணன், பண்ணன் முதலானோர் வள்ளல்களாய் வாழ்ந்து பெரும்புகழ் பெற்றவர்களே. ஆயின், அவர்களை இந்த எழுவரோடு சேர்த்து எண்ணும் மரபு இல்லை. தனித்தனியே அவர்களைப் போற்றும் பாடல்கள் உண்டு.

ஏழு வள்ளல்கள் எனப் புகழப்படும் அவர்கள், பாரி, ஓரி, காரி, அதிகன், பேகன், ஆய், நள்ளி எனப்படுவோர். இவர்களுள் ஓரி, காரி, பேகன், நள்ளி ஆகிய நால்வரின் கொடைச்செயல்கள் பற்றி அறியத்தக்க குறிப்புகள் பலவாக இல்லை. பாரி, அதிகன், ஆய் பற்றிய செய்திகள் பல பாடல்களில் உள்ளன.

**ஓரி**: இவன் கொல்லி மலையைச் சார்ந்த நாட்டை ஆண்ட தலைவன்; கூத்தர்க்குப் பெரிதும் உதவியவன்; தன் நாட்டையும் நல்கிய வள்ளல்.

**காரி**: இவன் மலையமானாட்டின் அரசன்; புலவர்க்கும் பிறர்க்கும் பெரும்பொருள் நல்கியவன்; புலவர்களின் அறிவுரையை மதித்து நடப்பவன்.

**பேகன்**: இவன் ஆவியர் குடியில் பிறந்தவன்; மலைநாட்டை ஆண்டவன்; மயில் குளிரால் நடுங்கியது என்று தன் உயர்ந்த போர்வையை அதற்கு நல்கி மகிழ்ந்தவன்.

**நள்ளி**: இவன் தோட்டி என்னும் மலையைச் சார்ந்த நாட்டின் தலைவன்; தன்னைச் சார்ந்தவர்க்குப் பல வகையாலும் வாழ்க்கைக்கு உரிய பொருள்களை ஈந்தவன்; தேரும் யானையும் இரப்பவர்க்குக் கொடுத்து உதவியவன்.

**பாரி**: இவன் பறம்பு நாட்டினை ஆண்டவன். அந்நாட்டில் முந்நூறு ஊர்கள் இருந்தனவாம். பறம்பு மலை இயற்கை வளம் மிகுந்தது. இவன் தன் கொடைத் திறத்தால் பெரும் புகழ் பெற்று விளங்கினான். இவன் காலத்திற்குப் பின் பல நூற்றாண்டுகள் கழித்து வந்த சுந்தரமூர்த்தி நாயனார் சிறந்த வள்ளலுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடும் இடத்தில்,

**கொடுக்கிலா தானைப் பாரியே என்று**
**கூறினும் கொடுப்பாரிலை**

என்று பாரியின் புகழ் விளங்கும் வகையில் பாடியுள்ளார். நத்தத்தனார், ஔவையார், கபிலர், நக்கீரர், நன்னாகனார், பெருஞ்சித்திரனார், இளவேட்டனார், மிளைக்கந்தனார் ஆகிய சங்கப் புலவர்கள் பாரியைப் புகழ்ந்து பாடியுள்ளனர். அவர்களுள் கபிலர்க்குப் பாரி ஆருயிர் நண்பனாக விளங்கினான். பாரியை மூவேந்தர் பகைத்துப் படையெடுத்துப் பறம்பு நாட்டை முற்றுகையிட்ட காலத்திலும், கபிலர் பாரிக்கு உற்ற துணையாக இருந்து, மூவேந்தரையும் எதிர்த்துப் பாரியின் பெருமை விளங்குமாறு பாடினார். பாரி இறந்த பிறகு, பாரியின் மகளிர் இருவரையும் உடன் அழைத்துச் சென்று அவர்களின் திருமணத்திற்காக முயன்றார். பறம்புமலையை விட்டுப் பிரிந்து செல்லும் நிலை நேர்ந்ததற்காக நெக்குருகிக் கபிலர் பாடிய பாட்டுக்கள் நெஞ்சை நெகிழ்விப்பனவாக உள்ளன. தம் ஆருயிர் நண்பனாகிய பாரியின் பிரிவை நினைந்து வருந்திய அப்புலவர், இறுதியில் பிரிவாற்றாமல் பெண்ணை யாற்றங் கரையில் தீக்குளித்தார். அவர்களின் நட்பு அவ்வளவு நெருங்கிய நட்பாக - விழுமிய நட்பாக இருந்தது.

ஒரு நாள் பாரி தன் மலைப்பகுதியில் வேட்டைக்குச் சென்று திரும்பியபோது வழியில் அழகாகப் பூத்துக் குலுங்கிய ஒரு முல்லைக்கொடி படர்வதற்கு ஏற்ற கொம்புகள் இல்லாமல் காற்றால் அலைந்துகொண்டிருந்ததைக் கண்டான். அந்தக் கொடி கொழுகொம்பு இல்லாமையால் துன்புறுவதாக உணரும் அளவிற்கு அவனுடைய மனம் இரக்கம் நிறைந்ததாக - மென்மைப் பண்பு உள்ளதாக இருந்தது. தான் ஏறிவந்த தேரின்மீது இருந்தவாறே அந்த முல்லைக் கொடியை அணுகிச் சென்றான். அப்போது காற்றால் அலைப்புண்டு அந்தக் கொடி பாரியின் தேர்மீது சாய்ந்து காற்றில் அலைப்பு இல்லாமல் அமைதியாக இருந்தது. அதைக் கண்ட பாரி, தன் தேரை அந்தக் கொடி படர்வதற்கு உதவும் பொருட்டு அங்கேயே நிறுத்திவிட்டு, நடந்து வந்து தன் அரண்மனை அடைந்தான்.

**சிறுவீமுல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**
**பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்**
**பறம்பின் கோமான் பாரி**

*(சிறுபாணாற்றுப்படை.89-91)*

சிறு பூக்களை உடைய சிறிய முல்லைக் கொடிக்குப் பெரிய தேரையே அளித்தவன் என்ற புகழ் பெற்றான். பாடும் புலவர்களுக்கும் பாணர்களுக்கும் பரிசாகத் தேர்களை வழங்கிப் பழகிய பாரி வள்ளல், தன்னைப் பாடாத முல்லைக் கொடிக்கும் அதே முறையில் தேர் கொடுத்தானே என்று அவனுடைய கொடை மடத்தைக் கபிலர் புகழ்ந்து பாடியுள்ளார்.

**பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை**
**நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்**
**கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த**
**பரந்தோங்கு சிறப்பின் பாரி**

*(புறநானூறு. 200)*

மழையைவிட வன்மை மிகுந்தவன் வேள் பாரி என்று அவனுடைய கொடைச் சிறப்பையும் அவர் நயமாகப் புகழ்ந்துள்ளார். "பாரி பாரி என்று புலவர் எல்லாரும் பாரியையே புகழ்கிறார்களே! இந்த உலகத்தைக் காப்பாற்றுவோன் பாரி மட்டுமா! மழையும் இருக்கின்றதே! மழையும் உலகத்தைக் காப்பாற்றுகிறதே" என்றார்.

**பாரி பாரி என்று பல ஏத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே**

*(புறநானூறு. 107)*

ஆடல் பாடல் கலைகளில் பாரிக்கு ஈடுபாடு இருந்தது. அதனால் அந்தக் கலைகளில் வல்ல பாணர்க்கும் கூத்தர்க்கும் விறலியர்க்கும் அவன் கணக்கில்லாமல் வாரி வழங்கினான். மூவேந்தர்கள் முற்றுகையிட்டபோதும் கபிலர் அந்தப் பகை வேந்தர்களுக்கு இதை நினைவூட்டினார். "இந்தப் பாரியின் பறம்பு மலையில் மரத்திற்கு ஒரு

யானையாகக் கட்டி, இடமெல்லாம் தேர்களாகப் பரப்பிச் சேனையைப் பெருக்கி நீங்கள் முற்றுகையிட்டாலும், இந்த நாட்டை நீங்கள் கைப்பற்ற முடியாது. நீங்கள் பாணர்கள் போல் பாடிக்கொண்டு வர, உங்கள் மகளிர் ஆடிக்கொண்டு வர, நீங்கள் பரிசிலாகக் கேட்டால், பாரி இந்த நாட்டையும் மலையையும் ஒரு சேர உங்களுக்குக் கொடுத்துவிடுவான்" என்றார். மற்றொரு பாட்டில், "இந்தப் பறம்பு நாட்டில் முந்நூறு ஊர்கள் உள்ளன. முந்நூறு ஊர்களையும் பாரி தன்னை நாடி வந்த பரிசிலர்க்குக் கொடுத்துவிட்டான். இப்போது அந்த வள்ளலின் உரிமையாக உள்ள பொருள்கள் யான், பாரி, இந்தக் குன்று ஆகிய இவ்வளவே ஆகும். நீங்கள் இரந்து கேட்பீர்களானால், பாரியாகிய அவனே உங்கள் பொருளாக உங்களிடம் வந்து விடுவான்; மறுக்கமாட்டான்" என்றார். இவ்வாறே மற்றப் புலவர்களும் பாரியின் தலையாய வண்மையைச் சிறப்பித்துள்ளனர்.

**அதிகன்**: இவன் அதியமான் நெடுமான் அஞ்சி என்று கூறப்படுவான். கொங்கு நாட்டில் தகடூர் (தருமபுரி) என்னும் ஊரில் ஆட்சி புரிந்தவன். தொடக்கத்தில் அவன் புலவர்களைச் சிறிது புறக்கணித்தாற்போல் நடந்தான். பிறகு அவர்களிடம் பேரன்பு செலுத்தி அவர்களின் வாழ்விற்கு உரிய நல்லுதவிகள் பல செய்தான். சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் என்ற புலவர் பெருமாட்டியாரிடம் நெருங்கிப் பழகி நட்புரிமை பூண்டான். ஔவையார் அறிவாற்றலில் சிறந்தவராக விளங்கியமையால், ஒருமுறை தன்னோடு பகைத்த தொண்டைமான் என்னும் அரசனிடம் ஒருவரைத் தூதனுப்ப எண்ணியபோது, அந்தத் தூதுக்குத் தக்கவராக ஔவையாரையே தேர்ந்து அவனிடம் செல்லுமாறு வேண்டி அனுப்பினான். ஔவையார் தன்னைவிட மூத்தவராக, முதிய தோற்றத்துடன் விளங்கியதைக் கண்ட அதியமான், அப்புலவர் நெடுங்காலம் வாழவேண்டும் என்று கவலை கொண்டான். வாழ்நாள் நீட்டிப்புக்கு உரிய நன்மருந்து வேண்டும் என்று பலரிடம் சொல்லி வைத்திருந்தான். அதியமான் தனக்காகவே அதனை நாடுகின்றான் என்று எண்ணிய மருத்துவர் உயர்ந்த நெல்லிக் கனிகளைத் தேடிக்கொண்டுபோய்த் தந்தார். ஆயின், அவற்றை அதியமான் தான் உண்ணாமல், அவற்றின் பயனும் சொல்லாமல், ஔவையாரிடம் தந்து அவற்றை உண்ணுமாறு செய்தான். பிறகு உண்மையை உணர்ந்த புலவர், அவனுடைய விழுமிய உதவியை நினைந்து,

> ***ஆதல் நின்னகத் தடக்கிச்***
> ***சாதல் நீங்க எமக்குஈத் தனையே***

என்று பாராட்டிப் புகழ்ந்து,

> ***நீல மணிமிடற் றொருவன் போல***
> ***மன்னுக பெரும! நிலமிசை யானே***
>
> *(புறநானூறு. 91)*

என வாயார வாழ்த்தினார். அதியமானிடம் பரிசில் பெறச் சென்றால் தவறாமல் பரிசில் கிடைக்கும் என்றும் ஒருநாள் அல்லாமல் பலநாள் தொடர்ந்து பலரோடு சென்று உதவி கேட்டாலும் முதல்நாள் போலவே விரும்பி அன்போடு உதவுதல் அதியமானின் பண்பு என்றும் அவனுடைய வண்மை சிறப்பிக்கப்பட்டுள்ளது.

> **ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**
> **பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
> **தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ**
>
> *(புறநானூறு. 101)*

**ஆய்**: இவன் பொதிய மலையைச் சார்ந்த நாட்டை ஆண்டவன்; ஆய்குடியைச் சார்ந்தவன். ஆய் அண்டிரன் என்பது இவனுடைய பெயர். அந்த நாடு பல நாடுகளை உடையது; காடுகளில் யானைகள் கூட்டம் கூட்டமாக வாழும். அந்த யானைகளைப் பழக்கியபின், தன்னை நாடி வருவோர்க்குப் பரிசிலாக அவற்றை வழங்குவான். அவனைப் புகழ்ந்து பாடிய முடமோசியார், "வள்ளலே! உன் நாட்டில் பெண் யானை ஒவ்வொரு முறையும் பத்துப் பத்து யானைக் கன்றுகளைப் பெறுமோ? நீ இரந்து கேட்டவர்க்கு மகிழ்ந்து கொடுத்த யானைகளுக்குக் கணக்கே இல்லையே" என்றார். ஆயின் நாட்டில் யானைகள் மிகப் பலவாய்த் திரிதலைக் கண்ட புலவர், "இந்தக் காடுகளுக்கு இவ்வளவு யானைகள் எப்படிக் கிடைத்தன? இந்தக் காடுகளும் எங்களைப்போல் வேள் ஆயைப் பாடிப் பரிசு பெற்றனவோ?" என்று பாடினார். வடக்கே இமயமலை எவ்வாறு இன்றியமையாத சிறப்பு உடையதோ, அவ்வாறே தெற்கே ஆய்குடியும் சிறப்பானது என்று ஒரு பாடல் பாராட்டுகின்றது.

இந்தப் பிறப்பில் செய்த புண்ணியம் மறு பிறவிக்குப் பயன்படும் என்று அறத்தை விற்று வாங்கும் அறவிலை வாணிகன் அல்லன் ஆய். சான்றோர் சென்ற நெறி என்று கொண்டு அமைவது இந்த வள்ளலின் கொடைப் பண்பு என்கிறார் முடமோசியார்.

> **இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்**
> **அறவிலை வணிகன் ஆய்அலன்; பிறரும்**
> **சான்றோர் சென்ற நெறிஎன**
> **ஆங்குப் பட்டன்றுஅவன் கைவண்மையே**
>
> *(புறநானூறு. 134)*

பிறர்க்குக் கொடுத்துக் கொடுத்துப் பொருளெல்லாம் தொலைந்து இறுதியில்

வறுமையுற்ற வள்ளல் ஆய். வறுமையால் அவனுடைய அரண்மனை பொலிவு இழந்தது. யானைகள் நிறைந்திருந்த பகுதிகள் வெறுமை உற்றன. யானைகளின் கட்டுத்தறிகளை அடுத்துக் காட்டு மயில்கள் கூட்டமாக வந்து தங்கின. அணிகலன்களால் பொலிவு பெற்றிருந்த அரண்மனைப் பெண்கள், மங்கல நாண் தவிர மற்ற எந்த அணிகலனும் இல்லாத வறிய நிலை அடைந்தனர். "யாருக்கும் கொடுத்து உதவாமல் தாம் மட்டுமே இனிய உணவை உண்டு தம் வயிற்றை மட்டுமே நிரப்பும் மற்றச் செல்வர்களின் அரண்மனைகள் அவ்வாறு இல்லை" என்று முடமோசியார் ஆய் உற்ற வறுமையை நினைந்து வருந்தும் பாடலிலும் அந்த வள்ளலின் கொடைச் சிறப்பு விளங்க வைத்தார்.

**குமணன்**: இவன் கொங்குநாட்டு முதிரமலைத் தலைவன். முன் குறித்த வள்ளல் எழுவரும் மறைந்த பிறகு வாழ்ந்தவன் இவன். பெருஞ்சித்திரனார் முதலாய புலவர் பலர்க்கு வாரி வழங்கிய வள்ளல் இவன். எக்காரணத்தாலோ, குமணனைத் துரத்திவிட்டு அவனுடைய தம்பி இளங்குமணன் ஆட்சியைக் கைப்பற்றினான். அண்ணனுடைய கொடைச் செயல்களும் இரக்கப் பண்பும் பற்றி இளங்குமணன் வெறுப்புற்றான். அவனுடைய ஆட்சியில் புலவரும் பிறரும் உதவிகள் பெற முடியவில்லை. மீண்டும் குமணனே ஆட்சிக்கு வந்து விடுவானோ என்ற அச்சத்தால், குமணனுடைய தலையைக் கொண்டு வருபவருக்குப் பரிசு தருவதாகச் செய்தி வெளியிட்டான். பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் குமணனைக் காணும் பொருட்டு அவனைத் தேடிச் சென்றார். காட்டில் ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடந்த குமணனைக் கண்டதும் புலவர் மிக நொந்து வாடினார். பிறகு வழக்கம்போல் வள்ளலின் புகழ் பாடினார். அப்பாடலைக் கேட்டதும் குமணன் இரங்கி, "என்னைப் பாடிய இப்புலவர்க்குப் பரிசில் கொடுக்காமல் அனுப்புவதோ? என் நாட்டை இழந்து வந்ததைவிட இது கொடுமையாக இருக்கிறதே" என்று வருந்தினான். உடனே தம்பி, தன் தலைக்குப் பரிசு வைத்திருக்கும் ஏற்பாட்டை நினைந்து மகிழ்ச்சியுற்றான். தன்னிடமிருந்த வாளை எடுத்துத் தந்து, "இதோ உமக்கு தரவல்ல பொருள் ஒன்று இன்னும் என்னிடம் உள்ளது. என் தலையைக் கொண்டு போய்த் தந்து பணம் பெற்றுக் கொள்க" என்றான், ஆனால் புலவர் அதற்கு உடன்படவில்லை; தம்பியிடம் சென்று அவன் திருந்துமாறு செய்தார். எல்லாவற்றையும்விடச் சிறந்ததாகிய தன் தலையையே பரிசிலாகக் கொடுக்க முன்வந்த கொடை நெஞ்சத்தைப் போற்றி உருகினார் புலவர்.

**பண்ணன்**: சோழ நாட்டில் காவிரிக் கரையில் சிறுகுடி என்னும் ஊரில் வாழ்ந்த செல்வன் பண்ணன் என்பவன். அவனுடைய கொடைச் சிறப்பையும் தன்னலம் துறந்த வாழ்வையும் கண்ட புலவர் கொற்றங்கொற்றனார் என்பவர், "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன்" என்று பாராட்டியுள்ளார். கோவூர்கிழார், செயலூர் இளம்பெண் சாத்தன் கொற்றனார், மதுரை அளக்கர் ஞாழார்மகனார் மள்ளனார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆகியோரும் இவ்வள்ளலைப் புகழ்ந்துள்ளனர். இவர்களுள் சோழன் பாடிய பாட்டு, தனிச் சிறப்புடையதாகும். பசிப்பிணி மருத்துவன் என்று சோழன் இவ்வள்ளலைச் சிறப்பித்துள்ளான்.

நாட்டில் உணவுப் பஞ்சம் மிகுந்து மக்களைப் பசிப்பிணி வாட்டிய ஒரு காலத்தில் சோழன் மக்களின் துன்பத்தைத் தீர்க்க எவ்வளவோ முயன்றான். நாடெங்கும் சென்று பசியால் வாடுவோரைக் கண்டு அவர்களின் அல்லலைத் துடைக்கப் பாடுபட்டான். பண்ணன் என்ற செல்வன் சிறுகுடியைச் சார்ந்த பகுதியில் பலர்க்கும் உணவு அளித்து உதவி புரியும் செய்தி சோழனுக்கு எட்டியது. உடனே சோழவேந்தன் அந்த ஊரை நோக்கிச் சென்றான். ஊர்க்குத் தொலைவில் இருந்தபோதே, உணவைப் பலர்க்குப் பங்கிடும் ஒலி கேட்டது; பழுத்த மரங்களில் பறவைகளின் ஆரவாரம் கேட்பதுபோல் இருந்தது அந்த ஒலி. இன்னும் சிறிது நெருங்கிச் சென்றபோது, சிறுவர் கூட்டம் கூட்டமாக அணி அணியாக வெண்சோற்றுத் திரளைக் கையில் ஏந்தியவராய்ச் செல்லுதல் கண்டான்; மழைக் காலத்தில் முட்டைகளைக் கொண்டு செல்லும் எறும்புகளின் வரிசைகள்போல் சிறுவரின் அணிகள் தோன்றின. "இன்னும் பண்ணன் வீடு வந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பசிப்பிணி மருத்துவன் பண்ணன் வீடு எங்கே? அருகே உள்ளதோ? இன்னும் தொலைவில் உள்ளதோ? கூறுங்கள்" என்று கேட்டான். "இத்தகைய கொடைவள்ளல் நெடுங்காலம் வாழ வேண்டும். யான் இனி வாழ்வதற்குரிய வாழ்நாளையும் அவனே பெற்று நெடுங்காலம் வாழ்வானாக" என்று சோழவேந்தன் சிறுகுடிகிழான் பண்ணனை வாயார வாழ்த்திப் பாடினான்; அதனால் இந்த வள்ளல், வேந்தன் பாடும் புகழ் உடையவன் ஆனான்.

***யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய***

*(புறநானூறு. 173)*

இவ்வாறு சங்க காலத்தில் வள்ளல்களாய் வாழ்ந்த பெருமக்கள் பலர். அவர்கள் தமிழிலக்கியத்தில் நின்று வாழும் சிறப்புற்றார்கள்.

***- இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, கலைக் காட்சிக்குழு வெளியீடு, சென்னை, 1968, பக். 27–31.***

# பயிலரங்குகள்

செம்மொழித் தமிழாய்வுகளை ஆராய்ச்சியை மேம்படுத்தவும் பரவலாக்கவும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் உள்ள கல்வி நிறுவனங்களுக்குப் பயிலரங்குகள் நடத்த ஆண்டுதோறும் நிதிநல்கி வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கான தமிழியல் மாணவர்களும் ஆய்வாளர்களும் பயன்பெற்றுள்ளனர். அவ்வகையில், 2015ஆம் ஆண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையில் பின்வரும் 46 பயிலரங்குகள் நடைபெற்றன.

1. **தமிழ்க் கல்வெட்டுகள் மற்றும் சங்க இலக்கியங்களில் தமிழர்களின் கலை இலக்கியப் பண்பாட்டுப் பதிவுகள்** - *முனைவர் ஜெ. சௌந்தரராஜன், பண்டை வரலாறு மற்றும் தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை (02.01.2015 முதல் 12.01.2015 வரை).*
2. **சமூகவியல் நோக்கில் புறநானூறு** - *முனைவர் அரசு பரமேசுவரன், தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி, நாமக்கல் (02.01.2015 முதல் 11.01.2015 வரை).*
3. **செம்மொழி இலக்கியங்களில் தமிழர் வழிபாட்டு மரபுகள்** - *முனைவர் மா. மணிமாறன், தமிழ்த்துறை, அரசுக் கலைக் கல்லூரி, பரமக்குடி (19.01.2015 முதல் 28.01.2015 வரை).*
4. **உரையாசிரியர்சார் இயக்கங்களும் தொல்காப்பிய உரை மாற்றங்களும்** - *முனைவர் இரா. மோரிஸ் ஜாய், தமிழாய்வுத்துறை, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, திருச்சி (19.01.2015 முதல் 29.01.2015 வரை).*
5. **நவீனக் கோட்பாட்டு நோக்கில் பழந்தமிழ் இலக்கியம்** - *முனைவர் மா. பத்மபிரியா, தமிழ்த்துறை, ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி (19.01.2015 முதல் 29.01.2015 வரை).*



6. **திறனாய்வுக் கோட்பாடுகளின் வெளிச்சத்தில் செவ்வியல் பிரதிகளை வாசித்தல்** - *முனைவர் மோ. செந்தில்குமார், தமிழ்த்துறை, அரசுக் கலைக் கல்லூரி, கோயம்புத்தூர் (19.01.2015 முதல் 29.01.2015 வரை).*



7. **கோட்பாட்டியல் நோக்கில் சங்க இலக்கியம்** - *முனைவர் இரா.திராவிடராணி, தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் (21.01.2015 முதல் 30.01.2015 வரை).*
8. **பன்முக நோக்கில் பரிபாடல்** - *முனைவர் பெ. முருகானந்தம், தமிழாய்வுத்துறை, மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை (21.01.2015 முதல் 31.01.2015 வரை).*
9. **தொல்லியல் நோக்கில் தமிழும் தமிழர் வரலாறும்** - *முனைவர் வீ. ஜெயசீலி, தமிழ்த்துறை, புனித சிலுவைக் கல்லூரி, நாகர்கோவில் (21.01.2015 முதல் 31.01.2015 வரை).*
10. **செவ்வியல் இலக்கியங்களில் வாழ்வியல் விழுமியங்கள்** - *முனைவர் ச. இராமமூர்த்தி, தமிழாய்வுத்துறை, மன்னர் துரைசிங்கம் அரசுக் கலைக் கல்லூரி, சிவகங்கை (21.01.2015 முதல் 30.01.2015 வரை).*
11. **சிலப்பதிகாரத்தில் நாடகக் கூறுகள்: பிரதியிலிருந்து நிகழ்த்துதலை நோக்கி** - *முனைவர் பிரபாகர் வேதமாணிக்கம், தமிழ்த்துறை, அமெரிக்கன் கல்லூரி, மதுரை (21.01.2015 முதல் 30.01.2015 வரை).*
12. **பத்துப்பாட்டுப் பதிப்பியல்புகளும் உரைநெறிகளும்** - *முனைவர் மா. கார்த்திகேயன், தமிழ்த்துறை, கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு (22.01.2015 முதல் 31.01.2015 வரை).*
13. **தொல்காப்பியப் புணரியல் கோட்பாடுகள்** - *முனைவர் ச. திருநாவுக்கரசு, தமிழ்த்துறை, ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் மற்றும் கலை அறிவியல் கல்லூரி, மயிலம் (22.01.2015 முதல் 31.01.2015 வரை).*
14. **அயலகத் தமிழர்களுக்கு அற இலக்கியங்கள் (மலேசிய மாணவர்கள்).** - *முனைவர் சா. உதயசூரியன், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (27.01.2015 முதல் 05.02.2015 வரை).*
15. **கேரளத்தில் சிலப்பதிகாரம்: வாய்மொழிமரபு, சடங்கு மரபு, நிகழ்த்துக்கலை மரபு** - *திரு. வீ. இரவி, தமிழ்த்துறை, அரசுக் கல்லூரி, பாலக்காடு (29.01.2015 முதல் 07.02.2015 வரை).*

16. **செவ்விலக்கியக் கலைவடிவங்களும் மாற்றுக்கலை வடிவங்களும்** - *முனைவர் சா. அமுதன், தமிழ்த்துறை சேதுபதி அரசுக் கலைக் கல்லூரி இராமநாதபுரம் (02.02.2015 முதல் 11.02.2015 வரை).*

17. **சங்கப் பனுவல்களும் அறிவியல் கூறுகளும்** - *முனைவர் ஏ. ரந்திர்குமார், ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி (02.02.2015 முதல் 11.02.2015 வரை).*

18. **சங்க இலக்கிய, இலக்கண நூல்களின்வழிச் சிற்றிலக்கிய வகைகளின் வளர்ச்சிப் படிநிலைகள்** - *முனைவர் சீ. குணசேகரன், தமிழ்த்துறை, அரசுக் கலைக் கல்லூரி, சேலம் (04.02.2015 முதல் 13.02.2015 வரை).*

19. **செவ்வியல் இலக்கியம் பயிற்று முறையும் ஆய்வுக் களங்களும்** - *முனைவர் ந. கலைவாணி, தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை (04.02.2015 முதல் 13.02.2015 வரை).*

20. **தமிழ் மரபிலக்கணங்களில் உருபனியல்** - *முனைவர் எஸ். ராஜா, மொழியியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் (04.02.2015 முதல் 13.02.2015 வரை).*

21. **சங்க இலக்கியங்களில் தகவல் தொடர்புக் கூறுகளும் மொழிச் செயல்பாடுகளும்** - *முனைவர் து. ஜானகி, அயல்நாட்டுத் தமிழர் புலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை (05.02.2015 முதல் 14.02.2015 வரை).*

22. **செவ்வியல் இலக்கியங்களில் நாட்டுப்புறக் கூறுகள்** - *முனைவர் து. தியாகராஜ், தமிழாய்வுத்துறை, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, திருச்சி (06.02.2015 முதல் 15.02.2015 வரை).*

23. **தொடரியல் அமைப்பு: தொல்காப்பியமும் நவீன மொழியியலும்** - *முனைவர் சி. ஏழுமலை, தமிழ்த்துறை, பெரியார் கலைக் கல்லூரி, கடலூர் (06.02.2015 முதல் 15.02.2015 வரை).*

24. **காலந்தோறும் சங்கப் பாடல்களின் தாக்கம்** - *முனைவர் ஜெ. தேவி, தமிழாய்வுத்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி (09.02.2015 முதல் 18.02.2015 வரை).*



25. **சங்க இலக்கியப் பின்புலத்தில் தமிழக வரலாறு** - *முனைவர் க. மோகன் காந்தி, தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர் (09.02.2015 முதல் 18.02.2015 வரை).*

26. **சங்க இலக்கியத் தொகுப்பு நெறிமுறைகள்** - *முனைவர் ஆ. ஏகாம்பரம், தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை (09.02.2015 முதல் 18.02.2015 வரை).*

27. **செவ்வியல் இலக்கணத் தமிழ்ச் சுவடிகளும் பதிப்புகளும்** - *முனைவர் மோ.கோ.கோவைமணி, சுவடியியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (10.02.2015 முதல் 19.02.2015 வரை).*

28. **சங்க இலக்கியங்களில் பல்துறைச் செய்திகள்** - *முனைவர் ஜி. கலாவதி, தமிழ்த்துறை, அவிநாசிலிங்கம் மனை அறிவியல் மகளிர் உயராய்வு நிறுவனம், கோயம்புத்தூர் (16.02.2015 முதல் 25.02.2015 வரை).*

29. **பழந்தமிழ் இலக்கிய மரபும் வாய்மொழி மரபும்** - *முனைவர் நா. இராமச்சந்திரன் நாயர், நாட்டுப்புறவியல் துறை, தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை (16.02.2015 முதல் 25.02.2015 வரை).*

30. **தொல்லியல் நோக்கில் சங்க இலக்கியங்கள்** - *முனைவர் பா. ஆனந்தகுமார், தமிழ்ப்புலம், காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல் (16.02.2015 முதல் 25 .02.2015 வரை).*




31. **பொருளிலக்கணம் - தொல்காப்பியமும் பிற்கால இலக்கண நூல்களும்** - முனைவர் இரா. கண்ணன்,



தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை (18.02.2015 முதல் 27.02.2015 வரை).

32. **பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மக்களின் வாழ்வியல் பதிவுகளும் சமூகநெறிப்படுத்துதலும்** - முனைவர் மு. சுதா, தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி (18.02.2015 முதல் 27.02.2015 வரை).

33. **பாடவேறுபாடு நோக்கில் பத்துப்பாட்டு ஓலைச்சுவடிகளும் பதிப்புகளும்** - முனைவர் கோ. உத்திராடம், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை (19.02.2015 முதல் 28.02.2015 வரை).



34. **செவ்வியல் இலக்கியங்களில் அடிக்கருத்தும் காட்சிப்படுத்தலும்** - முனைவர் அரங்க. பாரி, தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் (20.02.2015 முதல் 01.03.2015 வரை).

35. **திருக்குறள் உரைகளும் பன்முக ஆய்வுகளும்** - முனைவர் வ. இரகுராமன், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை (23.02.2015 முதல் 04.03.2015 வரை).

36. **செவ்விலக்கியங்களில் காணப்படும் பண்களுக்கான பயிற்சிப் பயிலரங்கம்** - முனைவர் இலட்சுமி





பொதுவாள், தமிழ் இசைக் கல்லூரி, இராஜா அண்ணாமலை மன்றம், சென்னை (23.02.2015 முதல் 04.03.2015 வரை).

37. **தத்துவ நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள் - மரபும் மாற்றமும்** - முனைவர் எம். தேவகி, சைவ சித்தாந்தத் தத்துவத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை (24.02.2015 முதல் 05.03.2015 வரை).

38. **தமிழ்ச் செவ்வியல் பனுவல்களில் மெய்யியல் கோட்பாடுகள்** - முனைவர் மு. முருகேசன், தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி, சேலம் (25.02.2015 முதல் 06.03.2015 வரை).

39. **புறநானூறு: பன்முகப் பார்வை** - முனைவர் க. கனகராசு, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி (27.02.2015 முதல் 08.03.2015 வரை).

40. **தொல்காப்பிய ஆய்வுக் களங்கள்** - முனைவர் செ. சாரதாம்பாள், ஒப்பிலக்கியத்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை (03.03.2015 முதல் 12.03.2015 வரை).



41. **நவீனக் கோட்பாடுகளின் பின்புலத்தில் சங்க இலக்கியம்** - முனைவர் அ. நந்தினி, தமிழ்த்துறை, செந்தமிழ்க் கல்லூரி, மதுரை (10.03.2015 முதல் 20.03.2015 வரை).




42. **மணிமேகலை காலச் சமயங்களும் அவற்றின் முற்கால நிலையும் பிற்கால நிலையும்** - முனைவர் மு. பழனியப்பன், தமிழ்த்துறை, மன்னர்




துரைசிங்கம் அரசுக் கலைக் கல்லூரி, சிவகங்கை (16.03.2015 முதல் 25.03.2015 வரை).

43. **கவிதையை மொழிபெயர்ப்பதில் ஏற்படும் சிக்கல்கள்** - முனைவர் அ. பூலோக ரம்பை, தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத் துறை, திராவிடப் பல்கலைக் கழகம், குப்பம், ஆந்திர மாநிலம் (20.03.2015 முதல் 30.03.2015 வரை).

44. **தமிழ்ச் செவ்வியல் நூல்கள்: பதிப்பு வரலாறும் நுட்பங்களும்** - முனைவர் மா. வெங்கடேசன், தமிழ்த்துறை, அரசுக் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி (20.03.2015 முதல் 29.03.2015 வரை).



45. **செவ்வியல் இலக்கியங்கள் காட்டும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல்** - முனைவர் ஆர். குமார் தமிழ்த்துறை, அழகப்பா அரசுக் கலைக் கல்லூரி, காரைக்குடி (22.03.2015 முதல் 31.03.2015 வரை).

46. **செவ்வியல் இலக்கியங்களில் மேலாண்மைச் சிந்தனைகள்** - முனைவர் சி. சிதம்பரம், தமிழ்ப்புலம், காந்திகிராமக் கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல் (22.03.2015 முதல் 31.03.2015 வரை)



# திருக்குறள், முத்தொள்ளாயிரம் அலைபேசிச் செயலி வெளியீடு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திருக்குறள், முத்தொள்ளாயிரம் ஆகிய இரண்டையும் அலைபேசிச் செயலிவழி மக்கள் பயன்பாட்டிற்கு வெளியிட்டது. இவ்வெளியீட்டு நிகழ்வு 18.01.2015 அன்று சென்னைப் புத்தகக் கண்காட்சியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறுவனப் பதிவாளர் **முனைவர் மு. முத்துவேலு** தலைமையுரை வழங்கப் **பேராசிரியர் ம. இராசேந்திரன், திரு. பரத்வாஜ், திரு. ஒளிவண்ணன், திரு. பத்ரி சேஷாத்திரி, முனைவர் மதன் கார்க்கி** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். **முனைவர் க. நர்மதா** நன்றியுரையாற்ற இவ் வெளியீட்டுவிழா நிறைவுபெற்றது.





# ஆய்வு உதவித்தொகைகள்

செம்மொழித் தமிழ் நூல்கள் நாற்பத்தொன்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் உதவித்தொகைகள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றது. அதன்படி 2015ஆம் ஆண்டு பின்வரும் முனைவர் பட்ட மேலாய்வாளர் மூவரும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் 23 பேரும் எழுத்துத் தேர்வும் நேர்காணலும் நடத்தித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## முனைவர் பட்ட மேலாய்வாளர்கள்

1. **முனைவர் ஆ. விநாயகமூர்த்தி**
2. **முனைவர் க. தமிழ்**
3. **முனைவர் அ. குபேந்திரன்**

## முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

1. **ம. ஆனந்தவள்ளி**
2. **ஆர். ஆனந்தி**
3. **தி. அன்பு**
4. **சு. புனேசுவரி**
5. **சு. ஞானசவுந்தரி**
6. **எம். ஜீவா**
7. **க. கலைச்செல்வி**
8. **த. கயல்விழி**
9. **ம. லலிதா**
10. **சு. மணிபாலன்**
11. **இரா. மணிகண்டன்**
12. **க. மாதிஷ்**
13. **ப. முருகவேல்**
14. **கு. நாகம்மாள்**
15. **என். பெரியசாமி**
16. **உ. பிரபாகரன்**
17. **ரே. ராமகிருஷ்ணன்**
18. **சா. ரம்யா தேவி**
19. **ரா. ரவி**
20. **சு. ரேகா**
21. **நா. சத்தியா**
22. **பி. சத்தியா**
23. **தே. தியாகராஜன்**

# பணியரங்கு

*இணையவழிக் கல்வி மற்றும் மொழித் தொழில்நுட்பத் திட்டப் பணியாளர்களுக்கு 10.08.2015ஆம் நாள் முதல் 19.08.2015ஆம் நாள் வரை 10 நாள் பணியரங்கு நடைபெற்றது. இப்பணியரங்கில் இணையவழிச் செம்மொழித் தமிழுக்குரிய பாடங்கள், இலக்கணங்கள், இலக்கணக் கருத்தலகுப் பாடத்திற்கான வடிவமைப்பு ஆகியவை சரிபார்க்கப்பட்டன. மேலும், இணையவழித் தமிழ்ச் செம்மொழி இலக்கணக் கலைச்சொல் களஞ்சியத் திட்டத்தை இணையத்திற்கேற்ப வடிவமைப்பதற்கான கலந்துரையாடல் நடத்தப்பட்டு மாதிரி வடிவமும் உருவாக்கப்பட்டது.*

*இப்பணியரங்கில் பேராசிரியர்* **சு.இராசாராம்** *அவர்கள் புறநிலை வல்லுநராகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். மொழித் தொழில்நுட்பத் திட்டப் பணியாளர்களான முனைவர்* **ந. தேவி**, *முனைவர்* **ந. பெரியசாமி**, *நிரலாளர்* **சு. கார்த்திகேயன்**, *நிரலாளர்* **இரா. அகிலன்** *ஆகியோர் இப்பணியரங்கில் பங்கேற்றனர்.*

# செம்மொழித் தமிழுக்கான குடியரசுத் தலைவர் விருதுகள்

செம்மொழித் தமிழில் அறிவுத்திறமும் நூற்புலமையும் கொண்டவர்களுக்குத் தொல்காப்பியர் விருது (ரூ.5 இலட்சம்), குறள்பீடம் விருது (ரூ. 5 இலட்சம்), இளம் அறிஞர் விருது (ரூ.1 இலட்சம்) ஆகியவை வழங்கப்படுகின்றன. அந்தவகையில், 2011-12, 2012-13ஆம் ஆண்டுகளுக்குரிய செம்மொழித் தமிழுக்கான குடியரசுத் தலைவர் விருதுகள் 14.05.2015 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களால் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த விழாவில் வழங்கப்பட்டன.

## (2011 - 12ஆம் ஆண்டுக்கான விருதுகள்)

### தொல்காப்பியர் விருது

**முனைவர் செ.வை. சண்முகம்**





### குறள்பீடம் விருது

**முனைவர் ஈவா மரியா வில்டன்**

# இளம் அறிஞர் விருது



முனைவர் கா. அய்யப்பன்



முனைவர் ஏ. எழில்வசந்தன்



முனைவர் க. ஜவஹர்

# செம்மொழித் தமிழுக்கான குடியரசுத் தலைவர் விருதுகள்

## (2012 - 13ஆம் ஆண்டுக்கான விருதுகள்)

### தொல்காப்பியர் விருது

**டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி**



### இளம் அறிஞர் விருது



**முனைவர் அ. சதீஷ்**



**முனைவர் இரா. வெங்கடேசன்**



**முனைவர் பா. ஜெய்கணேஷ்**



**முனைவர் மு. இரா. தேவகி**



**முனைவர் உ. அலிபாவா**

குறிப்பு : **குறள்பீடம் விருது 2012-13ஆம் ஆண்டு வழங்கப்படவில்லை.**



2011-12, 2012-13ஆம் ஆண்டுக்குரிய செம்மொழித் தமிழுக்கான குடியரசுத் தலைவர் விருது பெற்றவர்களின் குழுப்படம்

# திருக்குறள் - குஜராத்தி மொழிபெயர்ப்பு வெளியீடு



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் திருக்குறள் குஜராத்தி மொழி பெயர்ப்பு நூலை 16.01.2015 அன்று **இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோதி** அவர்கள் வெளியிட்டார். இந்தி மொழிப் பேராசிரியரும் குஜராத்தில் பிறந்து தமிழகத்தில் வாழ்ந்து வருபவருமான **முனைவர் பி.சி. கோகிலா** அவர்கள் இந்நூலைக் குஜராத்தியில் மொழிபெயர்த்தார். திருவள்ளுவர் நாளை ஒட்டித் தில்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. பிரதமர் அவர்கள் இந்நூலை வெளியிட்டுத் திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் **மோதி** பேசியபோது, "**புலவர் திருவள்ளுவருக்கு நான் தலைவணங்குகின்றேன்; எளிமையும் அளப்பரிய நம்பிக்கையும் கொண்டுள்ள அவரது சிந்தனையும் எழுத்தும் பல நூற்றாண்டுகளாக மனித இனத்தின் மீது வலுவான ஆளுமையைச் செலுத்தி வருகின்றன**" என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் நடுவண் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி **ஸ்மிருதி சுபின் இராணி**, **முனைவர் பி.சி. கோகிலா**, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு இயக்குநர் **வீ.கோ.பூமா** உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்டம் இணையத்தில் வெளியீடு






மாண்புமிகு நடுவண் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் **திருமதி ஸ்மிருதி சுபின் இராணி** அவர்களால் 21.02.2015 அன்று சென்னையிலுள்ள எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தாய்மொழி நாள் விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இணையவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்டத்தின் அகம், புறம் பாடக் கருத்தலகுகள் நிறுவன இணையத்தில் பதிவேற்றம் செய்து வெளியிடப்பட்டன. இவ்விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் துணைத்தலைவர் **பேராசிரியர் ஔவை நடராசன்**, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு இயக்குநர் **திருமதி வீ.கோ. பூமா** உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# பணிக்குழாம்

இயக்குநர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

*ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி
முனைவர் ந. தேவி
முனைவர் க. நர்மதா
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் கு. ஜெயகுமாரி

*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் சு. ஏழுமலை
முனைவர் மு. செல்வதுரை
முனைவர் சே. கரும்பாயிரம்
முனைவர் த. சரவணன்
முனைவர் இரா. வெங்கடேசன்
முனைவர் ந. பெரியசாமி
முனைவர் வ. மாரியப்பன்
முனைவர் ம. தமிழ்வாணன்
முனைவர் அ. ஆரோக்கியதாசு
முனைவர் மா. சுசிலா
முனைவர் ப. கண்ணதாசன்
முனைவர் சுப. வேல்முருகன்
முனைவர் வே. அழகுமுத்து
முனைவர். ம. நாகராஜன்
முனைவர் சி. இராமச்சந்திரன்

*இளநிலை ஆய்வு வளமையர்கள்*

திருமதி ம. தாமரைச்செல்வி
திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்
திரு. கி. கண்ணன்
திரு. கோ. சந்திரசேகர்

*தொழில்நுட்பப் பணியாளர்கள்*

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*
திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*
முனைவர் இரா. அகிலன் *(நிரலாளர்)*
திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*
திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*
திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

*நிருவாகப் பணியாளர்கள்*

திரு. கோ. புண்ணியமூர்த்தி
*(அலுவலகக் கண்காணிப்பாளர்)*
திரு. ஜா.வா. பாஸ்கரன்
*(இளநிலைக் கணக்கு அலுவலர்)*
திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*
திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*
திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*
திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

*தரவு உள்ளீட்டாளர்கள்*

திரு. வெ. சிவப்பிரகாசம்
திருமதி சு. கீதா
திரு. தி.ஞா. அருள்ஒளி
திரு. மு. முனியசாமி
திரு. சோ. சரவணன்

*அனுப்புகை உதவியாளர்*

திரு. ம. கோவிந்தன்

*பன்னோக்கு உதவியாளர்கள்*

திருமதி. ந. ஜெயலட்சுமி
திருமதி. சி. அன்னபூரணி

தொல்காப்பியம்

எட்டுத்தொகை

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

பத்துப்பாட்டு

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

பதினெண் கீழ்க்கணக்கு

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னாநாற்பது
- இனியவைநாற்பது
- கார்நாற்பது
- களவழிநாற்பது
- ஐந்திணைஐம்பது
- ஐந்திணைஎழுபது
- திணைமொழிஐம்பது
- திணைமாலைநூற்றைம்பது
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

சிலப்பதிகாரம்

மணிமேகலை

முத்தொள்ளாயிரம்

இறையனார் களவியல்